**நகராட்சி நிர்வாக ஆணையரம், சேப்பாக்கம், சென்னை—5.**

----

**ந.க.எண். 3395/2006/ஆர்1,** **நாள் 01.03.2006**

**சுற்றறிக்கை**

பொருள் தணிக்கை—மாநகராட்சி/நகராட்சிகளில் சொத்துவரிச் சீராய்வு— அறிவுரை வழங்குதல்—குறித்து.

பார்வை 1. அரசாணை எண்.169 மற்றும் 170, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 2.9.98.

2. சென்னை உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் கடிதம் ந.க.எண். 59511/2005/நநி2, நாள் 04.01.2006.

----

பார்வை 1ல் காணும் அரசாணைகளின் கண் மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்களின் கவனம் கொண்டு வரப்படுகிறது.

அரசாணை எண். 169, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 2.9.98—ன்படி அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிலும் 1.10.98 முதல் சொத்துவரிச் சீராய்வு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களின் நடைமுறையிலுள்ள சட்டப்படியான வழிவகைகளின்படி (Existing statutory provisions) மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளது. மேலும் அரசாணை எண்.170, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 2.9.98—ல் சொத்துவரிச் சீராய்வில் சொத்துவரி விதிப்பது குறித்து மதிப்பீடு செய்யப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் மேற்படி அரசாணைகளுக்கு புறம்பாக திருநெல்வேலி மாநகராட்சியில் புதிய சட்டத்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு கட்டிடங்களுக்கு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு வருவது குறித்து தணிக்கையின்போது அறியப்பட்டதாக பார்வை 2ல் காணும் உள்ளாட்சித் தணிக்கை இயக்குநரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சொத்துவரி சீராய்வின்போது கீழ்க் குறிப்பிட்ட இனங்களுக்கு சொத்துவரி விதிப்பது குறித்து மதிப்பீடு செய்யப்படவேண்டும்.

1. கட்டிடங்களக்கு பொதுச் சீராய்வின்போது சொத்துவரி விதிப்பதற்கு ஆண்டு மதிப்பு நிர்ணயிப்பது குறித்து.
2. கட்டிட சொந்தக்காரர்கள் அல்லது குடியிருப்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட விபர அறிக்கையில் குறிப்பிடப்பட்ட குறிப்புகளின் அடிப்படையில் சொத்துவரி செலுத்தப்படவேண்டியது குறித்து.
3. கட்டிட உரிமதாரர்/குடியிருப்பவரால் சொத்துவரி செலுத்தப்பட வேண்டியது குறித்து பின்பற்றத்தக்க வழிமுறைகள் குறித்து மன்றத்தால் ஏதேனும் தீர்மானிக்கப்பட்டு வெளியிடப்பட்டது குறித்து.

மேலும், அரசாணை எண்.170, பத்தி 4ல் 1.10.98 முதல் சொத்துவரி பொதுச் சீராய்வு மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதால், வரி விதிப்புகளுக்கான விதிகளுக்கு திருத்தம் வெளியிடப்படும் வரையில் 1.10.98 அன்று பொதுச் சீராய்வு மேற்கொள்ளும்போது ஏனைய இனங்களை கணக்கில் கொள்வதுடன் கட்டிடங்களுக்கு நடைமுறையில் உள்ள 1.10.98

அன்று ஆன ஆண்டு மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு அதனடிப்படையில் சொத்துவரி பொதுச் சீராய்வு மேள்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதால் அதன் அடிப்படையிலேயே அடுத்த சொத்துவரி பொதுச் சீராய்வு வரையில் அனைத்து உள்ளாட்சிகளிலும் கட்டிடஙகளுக்கு சொத்துவரி நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

எனவே, அனைத்து மாநகராட்சி/நகராட்சி ஆணையர்களுக்கும் அரசாணை எண். 170, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை, நாள் 2.9.98ல் பத்தி 4—ன்படி சொத்துவரி விதிப்புகளுக்கான விதிகளுக்கு திருத்தம் வெளியிடப்படும் வரையில் 1.10.98 அன்று ஆன சொத்துவரி பொதுச் சீராய்வின்போது கட்டிடஙகளுக்கு 1.10.98 அன்று ஆன ஆண்டு மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு சொத்துவரி நிர்ணயம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளதால் அதன் அடிப்படையிலேயே அடுத்த சொத்துவரி பொதுச் சீராய்வு அனைத்து உள்ளாட்சிகளிலும் சொத்துவரி நிர்ணயம் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இச்சுற்றறிக்கை கிடைக்கப்பெற்றதற்கான ஏற்பளிப்பினை உடன் மறுதபாலில் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/—மா.ராஜகுமார்,
நகராட்சி நிர்வாக ஆணைப்படுகிறது.

பெறுநர்

அனைத்து நகராட்சி ஆணையர்கள்

2. அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்
(சென்னை நீஙகலாக)

நகல்

1. இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை,
சென்னை—108.
2. நகராட்சி நிர்வாக இணை இயக்குநர் (மாநகராட்சி)
3. ஆர் 1 இருப்புக்கோப்பிற்கு.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்.